பொருளடக்கம்


| இல | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 01 | ஆரம்பமும் அங்கத்துவமும் | 1 |
| 02 | கனடா காரை கலாச்சார மன்றத்தின் அனுசரணை | 1 |
| 03 | விளான் காணி கொள்வனவும் குழாய்க்கிணறு அமைத்தலும் | 1 |
| 04 | தற்காலிக வீட்டுத்திட்டம் | 2 |
| 05 | கண் சத்திர சிகிச்சையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் | 3 |
| 06 | இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் | 3 |
| 07 | காரைநகர் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் வாணி விழாவும் | 4 |
| 08 | விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடல் | 4 |
| 09 | முன்பள்ளி ஆசிரியைகளின் சம்பள முரண்பாடும் கற்பித்தலுக்கான உதவியும் | 5 |
| 10 | வலந்தலைச்சந்தி பஸ்நிலையமும் தன்னியக்க பண மீளளிக்கும் இயந்திர செயற்பாடும் | 5 |
| 11 | நூல்நிலையம் | 6 |
| 12 | கேணி, குளம், வாய்க்கால் தூர்வார்வு வேலைகள் | 7 |
| 13 | தியாகத்திறன் வேள்விப்போட்டியும் முத்தமிழ் விழாவும் | 8 |
| 14 | பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி ஞாபகார்த்த சைக்கிளோட்டப்போட்டி | 9 |
| 15 | பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி உதவுதொகை வழங்கல் | 10 |
| 16 | வறிய குடும்பத்திற்கான வாழ்வாதார மேம்பாட்டிற்காக தையல் இயந்திரம் வழங்கல் | 10 |
| 17 | குடிநீர் விநியோகம் | 11 |
| 18 | அலுவலக மாற்றமும் பொருள் அன்பளிப்பும் | 12 |
| 19 | ஒப்பந்த வேலைகள் | 13 |
| 20 | அமரர் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களின் ஞாபகார்த்த பஸ்தரிப்பு நிலையம் | 13 |
| 21 | காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஒன்றுகூடலும் சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வும் | 14 |
| 22 | கல்வி ஊக்குவிப்பு நிகழ்வு | 14 |
| 23 | உத்தியோகபூர்வ பணி (நிலமெஹெவர) ஜனாதிபதி மக்கள் சேவை | 15 |
| 24 | கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஏற்பாட்டில் நூலக நிறுவனப் பிரதிநிதியுடனான கலந்துரையாடல் 17.03.2019 ஞாயிற்றுக்கிழமை காரைநகர் அபிவிருத்திச்சபை மாணவர் நூலகத்தில் இடம்பெற்றது | 16 |
| 25 | பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தினரால் காரைநகர்ப் பிரதேச வைத்தியசாலை மேம்பாட்டிற்காக வைப்புச் செய்யப்பட்ட நிதியின் வருடாந்த வட்டிப்பணத்தின் மூலம் வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் | 17 |
| 26 | முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்விச் சுற்றுலா | 18 |
| 27 | சுவிஸ் காரைத்தென்றல் | 19 |
| 28 | தகுதியான வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு | 19 |
| 29 | காரைநகர்ப் பிரதேச முன்பள்ளிகளின் 2019ஆம் ஆண்டு விளையாட்டு விழா | 20 |
| 30 | வறிய மாணவிக்கான துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு | 20 |
| 31 | பனம் விதை நடுகை | 21 |
| 32 | வெளியீடுகள் | 21 |
| 33 | ஏனைய பொதுப்பணிகள் | 22 |
| 34 | கூட்டங்களும் கலந்துரையாடல்களும் | 23 |
| 35 | நிறைவுரை | 23 |

# 27.03.2017 – 05.08.2019 வரையான செயற்பணி அறிக்கை

## 01. ஆரம்பமும் அங்கத்துவமும்

எமது காரை அபிவிருத்திச்சபை கடந்த 2005ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமாகும். 01.11.2006 திகதியிடப்பட்ட KR/AGA/SS/NGO/2006/02 என்ற இலக்கம் கொண்டதாக காரைநகர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அக் காலத்திலிருந்து அங்கத்தவர்கள் வாழ்நாள் உறுப்பினர்களாகவும் சாதாரண உறுப்பினர்களாகவும் இருந்து வருகின்றனர். அந்த வகையில் 2019ஆம் ஆண்டு ஆவணி மாதம் 05ஆம் திகதி வரை சாதாரண அங்கத்துவம் 68 பேரும் வாழ்நாள் உறுப்பினர்கள் 64 பேராகவும் இருக்கின்றார்கள்.


## 02. கனடா காரை கலாச்சார மன்றத்தின் அனுசரணை

எமது பாடசாலை மாணவர்களின் கல்வியினைக் கருத்திற் கொண்டும் நீண்ட கால நோக்குடனும் காரைநகரிலுள்ள 12 ஆரம்பப் பாடசாலைகளுக்கு நிரந்தர வைப்புப் பணமாக தலா 1,000,000/= ரூபா வீதம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு குறித்த வைப்புத் தொகைக்கு வழங்கப்படும் வட்டியினை ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் பெற்று மாணவர்களின் கல்விக்கு செலவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அதிபர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் விபரம்:

1. யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்
2. யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை
3. யா/காரை ஊரி அ.மி.த.க.வித்தியாலயம்
4. யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை
5. யா/யாழ்ற்ரன் கல்லூரி
6. யா/சுப்பிரமணிய வித்தியாலயம்
7. யா/தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலயம்
8. யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
9. யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
10. யா/வியாவில் சைவ வித்தியாலயம்
11. யா/காரை மெய்கண்டான் வித்தியாலயம்
12. யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை

## 03. விளான் காணி கொள்வனவும் குழாய்க்கிணறு அமைத்தலும்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினர் காரைநகருக்கு குடிநீர் எடுப்பதில் பல கட்டுப்பாடுகளை விதிக்க இருந்ததை முன்னிட்டு 02.07.2018 ஆம் திகதிய நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் விளான் பகுதியில் 2¾ பரப்புக்காணி 19.07.2018இல் 825,000/= ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டு அதன் எல்லைகளுக்கு தகரவேலி அடைக்கப்பட்டு குழாய்க்கிணறும் அமைத்து 16.09.2018ஆம் திகதி கிணற்றுக்கான பொங்கலும் வழிபாடும் நடாத்தப்பட்டு 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்திலிருந்து குடிநீரை எடுத்து எமது மக்களுக்கு விநியோகிக்கின்றோம். அத்துடன் அக்கிணற்றிலிருந்து காரைநகர்ப் பிரதேச சபைக்கும் 03.01.2019 இலிருந்து ஒரு லீற்றர் 0.03 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இப்படி இருக்கும் வேளை கடந்த 24.03.2019ஆம் திகதி அப்பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இக்கிணற்றின் பாவனை தடைப்பட்டுள்ளது.







## 04. தற்காலிக வீடமைப்புத்திட்டம்

அரசாங்கத்தால் வீட்டுத்திட்டம் கிடைக்காத மிக வறிய மக்களின் கோரிக்கையின் பிரகாரம் அல்லின் வீதியைச் சேர்ந்த இராசகோபால் லதாராணி என்பவர் கணவரால் கைவிடப்பட்ட நிலையில் ஒரு பிள்ளையுடனும் அவரது தாயாருடனும் கொட்டிலில் வாழ்ந்து வந்த நிலையில் எமது சபைக்கு தெரியப்படுத்தியதன் பிரகாரம் நாம் கனடா காரை கலாச்சார மன்றத்தினருக்கு தெரியப்படுத்தியதன் பயனாக அம் மன்றத் தலைவர் நேரடியாக சமுகமளித்து உண்மைத் தன்மையினை உணர்ந்து 238,915/= ரூபா செலவில் தற்காலிக வீடமைத்து கனடா காரை கலாச்சார மன்றத்தின் தலைவர் திரு.ச.பாலச்சந்திரன் அவர்கள் சமுகமளித்து குறித்த வீட்டுத் திறப்பினை எளிமையான முறையில் எமது சபை உறுப்பினர்கள் மத்தியில் திருமதி.லதாராணியிடம் கையளித்தார். குறித்த குடும்பம் மனநிறைவோடு வாழ்ந்து வருகின்றது. அதே இடத்தைச் சேர்ந்த தவமணியின் கணவர் போரினால் பாதிக்கப்பட்டு உடல்நலக் குறைவோடு வாழ்ந்து வருவதை கவனத்தில் எடுத்து குடிசையில் வாழ்ந்த இவருக்கு தற்காலிக வீட்டுத்திட்டம் 241,650/= ரூபா செலவில் அமைத்து குறித்த திட்டம் பூரணப்படுத்தப்பட்டு அவர்களும் மனநிறைவோடு வாழ்கின்றனர். அதேபோல இலகடியைச் சேர்ந்த க.உருத்திரன் என்பவரும் நோயாளியான நிலையில் வறுமையில் வாழ்ந்து எமக்கு விண்ணப்பித்ததை பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்திற்குத் தெரியப்படுத்தியதை அடுத்து ரூபா 200,000/= செலவில் தற்காலிக வீடமைத்து நிறைவு செய்யப்பட்டு திருப்தியுடன் அக்குடும்பமும் வாழ்கின்றார்கள். இவரது வீட்டையும் குடும்பத்தையும் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத் தலைவர்களான திரு.க.மயில்வாகனம் அவர்களும் திரு.செல்வச்சந்திரன்(நேருமாஸ்ரர்) அவர்களும் நேரில் பார்வையிட்டு திருப்தியடைந்தனர்.










## 05. கண் சத்திர சிகிச்சையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

2017ஆம் ஆண்டிற்கு முன்னர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் பல லட்ச ரூபா செலவில் பலருக்கு கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. கடந்த 2017, 2018ஆம் ஆண்டுகளில் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதன் பயனாக 2017ஆம் ஆண்டு 27 பேருக்கும் 2018ஆம் ஆண்டு 23 பேருக்கும் கண் சத்திர சிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு வைத்தியரின் சிபார்சின் பேரில் 2017ஆம் ஆண்டு 6 பேருக்கும் 2018ஆம் ஆண்டு 11 பேருக்கும் மூக்குக்கண்ணாடி கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இவற்றிற்கான செலவீனம் சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை மூலம் ரூபா 38,500/= உம் காரை அபிவிருத்திச்சபை மூலம் ரூபா 24,500/= உம் செலவழிக்கப்பட்டது.









## 06. இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

எமது சபை நிர்வாக உறுப்பினர் Dr.ஆ.சிவசோதி அவர்களின் முயற்சியினால் கொழும்பு றோட்டறிக் கழகத்தின் மூலமாக 08.11.2018 அன்று சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இலவச கண் பரிசோதனையும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கலும் முகாம் நடாத்தப் பெற்று 410 பொதுமக்கள் பயனடைந்தனர். இந்த மருத்துவ முகாமில் அவுஸ்திரேலியா நாட்டு வைத்திய குழுவினர் 15 பேர் சேவையில் ஈடுபட்டனர். எமது ஊரைச் சேர்ந்தவரும் றோட்டறிக்கழகத்தின் உறுப்பினருமாகிய திரு.பரமநாதன் அவர்கள் சமுகமளித்து இச் சேவையினை சிறப்புற நடாத்த உதவினார்.





## 07. காரைநகர் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் வாணி விழாவும்


16.10.2018இல் நூலகத்தில் நடைபெற்ற வாணிவிழாவிற்கு வருகை தந்த லண்டன், பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதிகளுடன் அபிவிருத்திச்சபையின் எதிர்கால நடவடிக்கை பற்றியும் கல்வி நடவடிக்கை பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் கடந்த காலங்களை மறந்து எதிர்காலத்தில் ஒரே அணியின் கீழ் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.





## 08. விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடல்

காரைநகரில் இயங்கிவரும் விளையாட்டுக் கழகங்களின் நன்மை கருதியும் அவர்களின் குறைபாடுகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் எல்லா அணிகளும் ஒற்றுமைப்பட்டு செயற்படுவதன் மூலம் காரைநகருக்கு வெளியே நடாத்தப்படும் போட்டிகளில் வெற்றிபெறலாம் என்ற நோக்குடன் காரைநகருக்கு விஜயம் செய்த பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் தலைவர் திரு.க.மயில்வாகனம் அவர்களின் வேண்டுதலின் பிரகாரம் 28.10.2018இல் காரைநகரிலுள்ள விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 13 பேரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் என்பன பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் ஆரம்ப காலத்தில் “காரை ஸ்போட்ஸ்” என்ற கழகமே காரைநகருக்கு பொதுவான கழகமாக செயற்பட்டதை நினைவுபடுத்தப்பட்டதுடன் அக்கழகத்தை மீளவும் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.





## 09. முன்பள்ளி ஆசிரியைகளின் சம்பள முரண்பாடும் கற்பித்தலுக்கான உதவியும்


18.12.2018இல் அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் தலைவர் திரு.செல்வச்சந்திரன்(நேரு மாஸ்ரர்) அவர்களும் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின் செயலாளர் திரு.எஸ்.சிவபாதசுந்தரம் அவர்களும் அவுஸ்திரேலியா காரைநலன்புரிச்சங்கத்தின் பிரதிநிதி திரு.க.தி.மகாதேவா அவர்களும் கலந்துகொண்டு மேற்படி விடயம் தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. இதற்கமைவாக 24.12.2018ஆம் திகதி காரைநகரிலுள்ள 13 முன்பள்ளி ஆசிரியர்கள் 20பேர் பங்குபற்றி தமது குறைபாடுகள் தொடர்பாக நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. அத்தருணம் அபிவிருத்திச்சபை நிர்வாக உறுப்பினர்களும் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தலைவர் திரு. செல்வச்சந்திரன்(நேரு மாஸ்ரர்) அவர்களும் கனடா நாட்டு கனடா காரை கலாசார மன்றத்தின் பிரதிநிதியும் ஊடகவியலாளருமாகிய திரு.தீசன் திரவியநாதன் அவர்களும் சமுகமளித்திருந்தனர். இதன்போது முன்பள்ளி ஆசிரியர்களில் 9பேர் மாகாணசபையூடாக வழங்கப்படும் 6000/=வை மாத்திரம் பெறுவதாகவும் ஏனையோர் ஏனைய அமைப்புக்கள் மூலம் 14000/= வரை பெறுவதை சுட்டிக்காட்டி இச்சம்பள முரண்பாட்டை மனிதநேய அடிப்படையில் சீர்செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர். இவர்களின் நியாயமான கோரிக்கையினை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தினர் தை 2019இலிருந்து 6000/= ரூபா பெறும் 9 ஆசிரியர்களுக்கு தலா 2000/=ரூபாவும் மற்றும் ஒருவருக்கு 4000/=ரூபாவும் 2019 தை மாதத்திலிருந்து வழங்குவதென ஒத்துக்கொள்ளப்பட்டது. இக்கொடுப்பனவை ஒவ்வொரு மாதம் 10ஆம் திகதியும் காரைநகர் அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 13 முன்பள்ளிகளுக்கும் ஆறுதல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கற்பித்தலுக்கான 86220/= ரூபா பெறுமதி கொண்ட புத்தகங்கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டது. இதற்கான பணத்தினையும் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் தந்துதவியுள்ளனர். அத்துடன் காரைநகர் முன்பள்ளி இணைப்பாளருக்கு 2019ஆம் ஆண்டு ஆனி மாதத்திலிருந்து ரூபா 5000/= மாதாந்தக் கொடுப்பனவாக பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.






## 10. வலந்தலைச்சந்தி பஸ்நிலையமும் தன்னியக்க பண மீளளிக்கும் இயந்திர செயற்பாடும்

வலந்தலைச் சந்தியில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியில் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தினரால் பேருந்துத் தரிப்பிட நிலையம் கட்டப்பட்டு மக்கள் சேவையிலுள்ளது. அத்தோடு குறித்த காணியில் மேற்குப்பக்கத்தில் வெற்றிடமாக இருந்த பகுதியில் மக்கள் நலன்கருதியும் மக்கள் வங்கிச் செயற்பாடு கருதி 26.07.2018ஆம் தினம் மக்கள் வங்கியுடன் ஐந்து வருடங்களுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தன்னியக்க பண மீளளிக்கும் இயந்திர கட்டடம் கட்டப்பட்டு மாதாந்தம் ரூபா 3500/= வாடகை பெறப்படுகின்றது. இக்கட்டடத் திறப்பு விழாவின் போது யாழ் பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளரை காரை இந்துக்கல்லூரி பான்ட் வாத்திய குழுவினர் மடத்துக்கரை அம்மன் ஆலயத்திலிருந்து வரவேற்கப்பட்டு குறித்த கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அத்தருணம் எமது சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் இலங்கை போக்குவரத்துச்சபை காரைநகர் சாலை அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## 11. நூல்நிலையம்


யாழ் மாவட்டத்தில் செயற்படும் நூலகங்களில் குறிப்பிடத்தக்க விசாலமான நூலகங்களில் எமது. நூலகமும் ஒன்றாகும். இரண்டு நூலக உதவியாளர்களுடனும் கணினிப்பகுதி ஆசிரியருடனும் அபிவிருத்திச்சபையினரது அனுமதியுடன் நூலகக் குழுவினரின் மேற்பார்வையில் எமது நூலகம் செயற்படுகின்றது. இந் நூலகத்தில் சமயம், சரித்திரம், இலக்கியம், சிறுகதை, சஞ்சிகை, உசாத்துணை நூல்கள், சோதிடம், கவிதை, பாடசாலைப் பயிற்சிப்புத்தகங்கள், பொதுஅறிவு, கட்டுரை, வினாவிடை போன்ற பல விடயங்களைக் கொண்ட 9945 புத்தகங்கள் இருந்தன. இந்த இரு வருடங்களிலும் பிரதேசசபை 55 புத்தகங்களும் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தால் 1001 புத்தகங்களும் சேர்த்து மொத்தம் 11001 புத்தகங்கள் இருக்கின்றன. அத்தோடு உதயன், வீரகேசரி ஆகிய புதினப் பத்திரிகைகளும் நாளாந்தம் வாசகர்களின் பாவனைக்கு போடப்பட்டுள்ளது.

2018 மார்கழி வரை இந்நூலகப் பயன்பாட்டில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட மொத்தம் 298 அங்கத்தவர்கள் பயன்பாட்டில் உள்ளனர். அத்தோடு நாளாந்தம் 40 ற்கும் மேற்பட்டோர் வாசகர் பயன்பாட்டிலும் பயன்பெறுகின்றனர். தினமும் காலை 9.00மணி – 01.00மணி பிற்பகல் 02.00மணி – 06.00மணிவரை நூலகசேவை நடைபெறுகின்றது. மேலும் மாணவர்களின் கணினி பயன்பாட்டை கவனத்தில் எடுத்து 12 கணினியுடன் கணினி பயிற்சி வகுப்பும் நடைபெறுகின்றது. இப்பயன்பாட்டில் 17 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். 16.10.2018ஆம் திகதி நூலகத்தில் வாணிவிழா நடாத்தப்பட்டது. இந் நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் காரைநகர் பிரதேசத்தில் புலமைப்பரிசில் பயிற்சி வகுப்பில் சித்தியடைந்த 15 மாணவர்களுக்கு தலா 2500/= ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இப்பரிசுத்தொகை ரூபா 37500/= கனடா காரை கலாச்சார மன்றத்தால் வழங்கப்பட்டது. எமது நூலகத்தின் நடவடிக்கையினை மேம்படுத்தும் நோக்குடன் நூலகம் தொடர்பாக பாண்டித்தியம் பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்கள் 4 ரீச்சர் உட்பட 7 பேர் கொண்ட கிட்ஸ்பார்க் பாடசாலை குழுவினருடன் எமது நூலகத்திற்கு விஜயம் செய்து எமது செயற்பாட்டினை வரவேற்றதுடன் மேலும் பல ஆலோசனைகளையும் வழங்கிச் சென்றனர்.

19.07.2017இல் புத்தக வாரத்தை முன்னிட்டு காரைநகர் இந்துக்கல்லூரி மாணவர்கள் 39 பேர் நூலகத்திற்கு வரவழைக்கப்பட்டு புத்தக வார நிகழ்வு நடாத்தப்பட்டது. நூலகத்தின் வளர்ச்சி கருதி 2017ஆம் ஆண்டிலிருந்து நூலகத்திற்கென தனியான நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு நாம் எடுத்த முயற்சியின் காரணமாக கனடா காரை கலாசார மன்றத்தினர் ரூபா 93000/= ,சிவா.தி.மகேசன் அவர்கள் 50000/= ரூபாவும் Dr.சு.நடராசாவும்

திரு.சிவா.தி.மகேசனும் 15000/= ரூபாவும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த க.சிவநேயன் அவர்கள் ரூபா 114140/= ரூபாவும் மா.கனகசபாபதி அவர்கள் 25000/= ரூபாவும் வழங்கியிருந்தனர். அத்தோடு பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கமும் நூலக வளர்ச்சிக்கு 55032/=ரூபா தந்துள்ளனர். நூலக உதவியாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவுதொகை அதிகரிக்கப்பட்டு மாதாந்தம் 9000/= ரூபா தலா இருவருக்கு வழங்கப்படுகின்றது.

அத்தோடு நூலகக் குழுவில் செயற்படும் திரு.செ.கெங்காதரன் அவர்கள் இந் நூலகத்தில் அங்கத்தவர்களாக இருக்கும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் நூலக அங்கத்தவர்கள் தங்கள் வருகையை உறுதிப்படுத்தி நூலகத்தால் வழங்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து அங்கு வைக்கப்பட்டிருக்கும் சேகரிப்புப் பெட்டியில் இடுவதை சேகரித்து அப்படிவத்தை குலுக்கல் முறை மூலம் 20 மாணவர்களைத் தெரிவுசெய்து ஒவ்வொரு மாணவருக்கும் தலா 500/= ரூபா வீதம் புத்தகம் வாங்குவதற்கான பணப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப் பணப்பரிசுத் திட்டம் ஒரு வருடத்தில் நான்கு தடவைகள் இடம்பெறுகின்றது. இதற்கான பணப்பிரிசுத் தொகையினை திரு.கெங்காதரன் அவர்களே வழங்கி வருகின்றார். மேலும் எமது நூலகத்தின் செயற்பாட்டை சர்வதேசம் அறியும் பொருட்டு 021 2251459ம் இலக்கங் கொண்ட இணையச் செயற்பாட்டினையும் செயற்படுத்தியுள்ளார்.





## 12. கேணி, குளம், வாய்க்கால் தூர்வார்வு வேலைகள்

காரைநகரிலுள்ள கேணி, குளம், வாய்க்கால்களில் மழைநீரைத் தேக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கில் 2017ஆம், 2018ஆம் ஆண்டுகளில் பின்வரும் தூர்வார்வு வேலைகள் நடைபெற்றது. 25.09.2018ஆம் திகதி இவ் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றபோது எமது சபையின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் பிரதேசசபைத் தவிசாளர், உபதவிசாளர், காரைநகர் பொது சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரை இளம் விவசாயிகள் கழக தலைவர், உறுப்பினர்கள், காரைநகர் கமநலசேவை அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

| இல | விபரம் | கி.சே.பிரிவு | ஆண்டு | அனுசரணை | தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | சடையாளி, ஆலங்கன்று, ஆலடிக்கேணிகள் | J/46,47,48 | 2017 | கனடா காரை கலாசார மன்றம் | 100000.00 |
| 02 | சிவன்கோவில் தாமரைக்குளம் | J/47 | 2017 | பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் | 50000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | மெலிஞ்சியோடைக்குளம் | J/41 | 2018 | காரை அபிவிருத்திச்சபை | 53250.00 |
| 04 | நாராணிகேணி 1 | J/41 | 2018 | திரு.சு.கதிர்காமநாதன் | |
| 05 | நாராணிகேணி 2 | J/41 | 2018 | திரு.சு.கதிர்காமநாதன் | |
| 06 | உதிரப்பட்டிக்குளம் | J/42 | 2018 | சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை | 69900.00 |
| 07 | விக்காவில் குளம் | J/48 | 2018 | கனடா காரை கலாசார மன்றம் | 60900.00 |
| 08 | கருங்காலி வாய்க்கால் | J/45 | 2018 | பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் | 13800.00 |
| 09 | கிளுவனை வாய்க்கால் | J/42 | 2018 | சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை | 57900.00 |
| 10 | நாவற்கண்டிக் கேணி | J/40 | 2018 | திரு.சண் (சுவிஸ்) | |
| 11 | குமிழங்குளி குளம் | J/40 | 2018 | திரு.தெய்வேந்திரம்(லண்டன்) | |
| 12 | பக்தர்கேணிக் குளம் | J/40 | 2018 | திரு.சிவனேஸ்வரன்(சுவிஸ்) | |





## 13. தியாகத்திறன் வேள்விப் போட்டியும் முத்தமிழ் விழாவும்

காரைநகர் அபிவிருத்திச்சபையும் சுவிஸ் காரை அபிவிருத்திச்சபையும் இணைந்து நடாத்திய மேற்படி விழாவானது காரைநகரில் கல்வி பயிலும் மாணவர்களினதும் காரைநகரைச் சேர்ந்த யாழ் மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்கிடையிலான கட்டுரை, திருக்குறள் எழுத்துப்பரீட்சை, திருக்குறள் மனனம், பொதுஅறிவு எழுத்துப்பரீட்சை, பொதுஅறிவு வினாடிவினா, பேச்சுப்போட்டி, தனிஇசை, குழுஇசை மற்றும் மாணவர் மட்டத்தில் பாடசாலை மட்டத்திலான நாடகப்போட்டியும் காரைநகர் பொது மன்றங்களுக்கிடையிலான நாடகப் போட்டியினையும் நடாத்துவதன் பொருட்டும் மாணவர்களுக்கிடையே ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என தரம் பிரித்து தியாகத்திறன் வேள்விப்போட்டி 2017, 2018 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்டது. 2017.12.03இல் அமரர்.ஜோன் மனோகரன் கெனடி அவர்கள் தலைமையில் யா/யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாண்பு பெறுபவர் வரிசையில் செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம்(ஆசிரியர்), திரு.ப.விக்னேஸ்வரன்(ஓய்வு நிலை மாகாண கல்வி அமைச்சின் செயலர்), அமரர்.கலாநிதி ஜோன் மனோகரன் கெனடி(விரிவுரையாளர்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவிற்கான மொத்தச் செலவு 264390/=ஆகும். 2018இல் மேற்படி போட்டிகள் வரிசையில் தரம்பிரிக்கப்பட்டு 497 மாணவர்கள் பங்குபற்றினர். இப்போட்டியில் முத்தமிழ் விழா 16.12.2018ஆம் திகதி காரைநகர் இந்துக்கல்லூரியில் நடாத்தப்பட்டு பரிசு பெற்றவர்களுக்கு 3000/=, 2000/=, 1500/=, 1000/= எனவும் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு தலா 500/= வீதமும் பணப்பரிசில் வழங்கப்பட்டது. அத்துடன் நாடகத்திற்கு முதலாம் பரிசு 20000/= வும் 2ஆம் பரிசு 15000/= வும் என வழங்கப்பட்டது. அத்துடன் காரைநகரில் பொதுப்பணிகளில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு வருடாவருடம் கௌரவித்து வாழ்த்துப்பா வழங்கிவரும் வகையில் இவ்வருடம் காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்தவரும் யாழ் மாவட்ட காணிப்பிரதிப் பதிவாளரும் இலவசக்கல்வி நிலைய இயக்குனரும் கணித ஆசிரியருமான திரு.கந்தையா நடராசா அவர்களுக்கு “சமூக சேவகர்” விருது வழங்கப்பட்டதுடன் காரைநகர் சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த ஓய்வுநிலை அரச வைத்திய அதிகாரியும் சமூக சேவகருமாகிய திரு.சுப்பிரமணியம் சுவாமிநாதன் அவர்களுக்கு “அருட்செல்வர்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதற்கான மொத்தச் செலவீனம் ரூபா

407569/=. இதற்கான பூரண அனுசரணை சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை. இந்நிகழ்வானது 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவது தடவையாக நடாத்தப்படுகின்றது.





## 14. பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி ஞாபகார்த்த சைக்கிளோட்டப்போட்டி

பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி அவர்களின் ஞாபகார்த்தமாக காரைநகரிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஆண்,பெண் இருபாலாருக்குமிடையே 07.07.2018ஆம் திகதி சைக்கிளோட்டப்போட்டி நடைபெற்றது. ஆண்கள் காரைநகர் சுற்று வீதியில் இரு தடவைகளும் பெண்கள் ஒரு தடவையுமாக போட்டி நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் சபையின் நிர்வாகசபை உறுப்பினர்களும் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரட்ணம், திரு.விஜயரத்தினம் பிரேமதாஸ் குமாரசிறி, திரு.பிரபாகரன் மற்றும் பிரமுகர்களும் பங்குபற்றியிருந்தனர். தொடர்ந்து 12.08.2018ஆம் திகதி பரிசளிக்கும் வைபவமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சபை நிர்வாகக் குழுவினரும் மற்றும் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரட்ணம், திரு.விஜயரத்தினம் பிரேமதாஸ் குமாரசிறி அனுசரணையாளர் திரு.க.சிவநேயன் அவர்களும் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர். இப்போட்டிக்கான அனுசரணையாளராக திரு.க.சிவநேயன் (சுவிஸ்) அவர்கள் முழுமையாகப் பொறுப்பேற்று ரூபா 76000/= பணப்பரிசும் ஏனைய செலவுகளுமாக மொத்தம் 91115/= ரூபா செலவழிக்கப்பட்டது.





## 15. பல்கலைக்கழக மாணவர்களுக்கான கல்வி உதவுதொகை வழங்கல்

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காரைநகரைச் சேர்ந்த வறிய மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பைக் கருத்திற் கொண்டு அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் கல்விக் கொடையாளர்களின் உதவியுடன் கீழ்க் குறிப்பிடும் மாணவர்களுக்கு நிபந்தனை அடிப்படையில் கல்விக்கான உதவுதொகை வழங்கப்படுகின்றது.

| இல | பெயர் | பாடசாலை | பல்கலைக்கழகம் | துறை | தொகை | அனுசரணை |
|---|---|---|---|---|---|---|
| 01 | செ.கமலேஸ்வரி | வேம்படி மகளிர் கல்லூரி | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | உயிர்முறைமை | 10000/= | கனடா காரை கலாசார மன்றம் |
| 02 | ம.நவநிலா | யாழ்ற்ரன் கல்லூரி | யாழ் பல்கலை | கலைப்பீடம் | 10000/= | கனடா காரை கலாசார மன்றம் |
| 03 | மோ.துர்சிகா | யாழ்ற்ரன் கல்லூரி | பேராதனை | முகாமைத்துவ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 10000/= | கனடா காரை கலாசார மன்றம் |
| 04 | ஆ.காயத்திரி | யாழ்ற்ரன் கல்லூரி | ஊவா வல்லஸ | கணினி விஞ்ஞானம் | 15000/= | கனடா காரை கலாசார மன்றம் |
| 05 | த.திருமகள் | யாழ்.இந்து மகளிர் கல்லூரி | யாழ் பல்கலை | முகாமைத்துவம் | 10000/= | சு.கதிர்காமநாதன் |
| 06 | ப.சிவப்பிரியா | விக்ரோறியாக கல்லூரி | யாழ் பல்கலை | கலைப்பீடம் | 10000/= | தி.தனபாலன் (ஒரு வருடத்திற்கானது) |

இவர்களுக்கான கல்வி உதவுதொகையினை காரை அபிவிருத்திச்சபை ஊடாக ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி அவர்களுடைய வங்கிக்கணக்கிற்கு வைப்புச் செய்யப்படுகின்றது. இக்கல்வி ஊக்குவிப்புக்கான உதவுதொகையினைப் பெறுவதற்கு எமது சபைத் தலைவர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களின் முயற்சியே என்பதனைக் குறிப்பிடுகின்றோம்.





## 16. வறிய குடும்பத்திற்கான வாழ்வாதார மேம்பாட்டிற்காக தையல் இயந்திரம் வழங்கல்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த செல்வி. காசலிங்கம் டிஷாந்தியின் வாழ்வாதார மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு காரைநகர் பிரதேச செயலகத்தின் மூலமாக பயிற்றப்பட்ட தையற் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற டிஷாந்தியின் கோரிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் நிதியுதவியுடன் 29424/= பெறுமதி கொண்ட தையல் இயந்திரம் 08.12.2018இல் காரை அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.



## 17. குடிநீர் விநியோகம்

பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தால் காரைநகர் மக்களின் குடிநீர் தேவை கருதி 2005ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி சபையின் அன்றைய செயலாளர் அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களும் சிவன்கோவில் காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் அன்றைய செயலாளர் அமரர் M.அழகேந்திரன் அவர்களும் சேர்ந்து அன்றைய காரைநகர் உதவி அரசாங்க அதிபர் கௌரவ ஸ்ரீமோகனன் அவர்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட ஆறுமாதகால ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் விநியோக சேவை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு பவுசர் வண்டிகளும் பல வருடங்கள் தொடர்ச்சியான சேவையில் ஈடுபடுவதால் அவைகளுக்கான திருத்த வேலைகளுக்கும் கணிசமான செலவினங்கள் ஏற்பட்டு வருகின்றது. இருப்பினும் பொதுமக்கள் சேவையினைக் . கருத்திற் கொண்டு ஒரு லீற்றர் 0.60 சதத்திற்கே குடிநீரை வழங்கி வந்தோம். குறித்த குடிநீரை விளான் பகுதியில் வாழும் மைனா என்று அழைக்கப்படும் தெய்வேந்திரம் என்பவரின் கிணற்றிலிருந்து ஒரு பவுசர் நீர் ஒரு தடவை பெறுவதற்கு ரூபா 200/= வீதம் கொடுத்து பெற்று வந்தோம். இந்த வேளையில் வலி. தென்மேற்கு பிரதேசசபையினர் குறித்த கிணற்று உரிமையாளர்களுடன் குடிநீரை விநியோகிப்பதில் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் தெரிவித்து பெரும் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட வேளையில் நாம் குறித்த விளான் பகுதியில் காணி ஒன்றை வாங்கி குழாய்க்கிணறு அமைத்து குடிநீரைப் பெற்று வந்தோம். அப்படி வரும் வேளையிலும் அப்பகுதி நிலத்தடி நீர் அதிகளவில் காரைநகருக்கு எடுத்துச் செல்வதால் நீர்வளம் குறைவதென அப்பகுதி மக்களின் முறைப்பாட்டையும் மக்கள் பிரதிநிதிகளின் முறைப்பாட்டையும் ஆராய்ந்து குடிநீருக்கான கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு 30.11.2018இல் வலி. தென்மேற்கு பிரதேசசபையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந் நிகழ்வில் தலைவரும் செயலாளரும் கலந்து கொண்டு எமது மக்களின் குடிநீர்த் தேவையினை பலகோணங்களில் விளக்கமளிக்கப்பட்டது. இருப்பினும் அன்று சமுகமளித்த மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் எமக்கு குடிநீர் வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டும் என்ற வகையில் காரைநகர் குடிமக்களின் சனத்தொகையில் ஒரு நபருக்கு 5 லீற்றர் வீதம் ஒரு நாளைக்கு 45000 லீற்றர் குடிநீரை மட்டும் எடுத்துச் செல்லலாம் என தீர்மானித்துள்ளதுடன் இதற்கான கண்காணிப்புக் குழுவையும் ஏற்பாடு செய்துள்ளனர். நாம் குடிநீரை எடுத்து வருவதில் பெரும் இடர்களுக்கு முகம்கொடுத்து வரும் வேளையில் 24.03.2019ஆம் திகதி பெரியவிளான் பகுதி மக்களாலும் பொது அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து குறித்த கிணற்றிலிருந்து குடிநீரை எடுப்பது முற்றாகத் தடைப்பட்டது. இருப்பினும் எமது மக்களின் குடிநீர்த் தேவையினைக் கருத்திற்கொண்டு நாம் அவசர நிர்வாகசபையைக் கூட்டி கலந்துரையாடியபோது அதில் சமுகமளித்த காரைநகர் பிரதேசசபையின் உப தவிசாளர் திரு.க.பாலச்சந்திரன் அவர்கள் தமது முயற்சியினால் நீர்வேலி பிரதேசத்திலுள்ள ஓர் அன்பரின் கிணற்றிலிருந்து அடுத்த நாளே குடிநீரைப் பெற்று மக்களுக்கு விநியோகித்து வந்தோம். தொடர்ந்து எமது சபையின் போஷகர் திரு.தி.பரமேஸ்வரன் அவர்களின் முயற்சியினால் சிறுப்பிட்டியிலுள்ள ஓர் ஆலயக் கிணற்றிலிருந்து குடிநீரைப் பெற்று வந்தோம். அச் செயற்பாடும் ஒரு வாரத்தில் தடைப்பட்டது. மேலும் எமது முயற்சியின் பயனாக பிரதேச செயலரின் முயற்சினால் நிலாவரைக் கிணற்றிலிருந்து வாரத்தில் நான்கு நாட்களுக்கு 02 தடவையும் மூன்று நாட்களுக்கு ஒரு தடவையுமாக தலா 14000 லீற்றர் தண்ணீரையும் எடுத்து வருகின்றோம். நீர்வேலி, நிலாவரை பகுதியிலிருந்து பெறும் நீருக்கு பணம் செலுத்தி வருவதையும் தூரத்தையும் மற்றும் செலவீனத்தையும் கவனத்திலெடுத்து கடந்த 22.05.2019 இலிருந்து ஒரு லீற்றர் தண்ணீர் ஒரு ரூபாவிற்கு வழங்கி வந்தோம். பின்னர் மக்கள் அபிப்பிராயத்தினை குடிநீர் விநியோக ஊழியர்கள்

எமக்குத் தெரிவித்ததையடுத்து 01.08.2019ஆம் திகதி தொடக்கம் லீற்றர் 0.80சதத்திற்கு வழங்கி வருகின்றோம். குடிநீர் சேவையில் ஈடுபடும் ஊழியர்களின் வேண்டுகோளுக்கிணங்க வருடாவருடம் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படுகின்றது .அந்த வகையில் 2018ஆம், 2019ஆம் ஆண்டுகளில் மொத்தமாக க.சண்முகநாதனுக்கு ரூபா 40000/=, பே.கணேசனுக்கு ரூபா 40000/=, வி.ஹரிகரனுக்கு ரூபா 40000/=, இ.சுதனுக்கு ரூபா 40000/=, ச.டசாந்தனுக்கு ரூபா 40000/=, கா.சுந்தரராசாவிற்கு 5000/= வழங்கப்பட்டது. இந்நீர் விநியோகச் செயற்பாட்டிற்கு வாகனம் மற்றும் விநியோகம் தொடர்பான அனுபவம் வாய்ந்த எமது சபையின் உபசெயலாளர் திரு.மு.பரம்தில்லைராசா அவர்கள் பொறுப்பாக இருந்து செயலாற்றி வருகின்றார்.







## 18. அலுவலக மாற்றமும் பொருள் அன்பளிப்பும்

சபையின் அலுவலகம் புதுவீதியில் உள்ள வீட்டில் செயற்பட்டவேளை வீட்டின் உரிமையாளர் குறித்த வீட்டினை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரி வந்தார். நாம் பல இடங்களில் பொருத்தமான வீட்டினை பார்த்தபோதும் வீடுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த வேளையில் எமது சபையின் போசகர் திரு.சு.கதிர்காமநாதன் அவர்கள் தமக்கு சொந்தமான மணற்காட்டில் அமைந்துள்ள வீட்டினை மாதம் ஒரு ரூபா வாடகைக்கு 2017 இலிருந்து 2020 மார்கழி 31 ஆம் திகதி வரை பாவிக்குமாறு தந்துதவினார். அதற்கமைய 06.12.2017ஆம் திகதி குறித்த வீட்டிற்கு சபை அலுவலகம் மாற்றப்பட்டது. அத்தோடு சபையின் தேவை கருதி போட்டோக்கொப்பி இயந்திரம் ஒன்றையும் அன்பளிப்பாகத் தந்து உதவினார். அத்தோடு சபையின் பாவனையிலிருந்த போட்டோக்கொப்பி இயந்திரம் சபையின் நூலகப் பாவனைக்கு மாற்றப்பட்டது.





## 19. ஒப்பந்த வேலைகள்

எமது சபையின் சார்பாக கடந்த 2018ஆம் ஆண்டு மூன்று ஒப்பந்த வேலைகளான சிவன்கோவில் பொதுமலசலகூட கட்டட வேலை, சிவன் கோவிலுக்கு அண்மையிலுள்ள 4 கிணறுகள் திருத்த வேலை, பக்தர்கேணி களவிலிப்பிட்டி வீதி புனரமைப்பு வேலைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு காலநிலை காரணமாக சிவன்கோவில் மலசலகூட வேலையின் மிகுதி வேலை பூர்த்தி செய்யப்பட்டது. ஏனைய இரண்டு வேலைகளும் பூரணப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. இவ் வேலைகளுக்காக சிவன்கோவில் மலசலகூடத்திற்கு 1236000/= ரூபாவும் நான்கு கிணற்று திருத்த வேலைகளுக்கு 820238/= ரூபாவும் பக்தர்கேணி களவிலிப்பிட்டி வீதிக்கு 1845601/= ரூபாவும் கிடைத்தது.





## 20. அமரர் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களின் ஞாபகார்த்த பஸ்தரிப்பு நிலையம்

அமரர் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக காரைநகர் பிரதேச வைத்தியசாலை வளாகத்திற்குள் பொதுமக்கள் நலன்கருதி பஸ்தரிப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு அவரது மகன் திரு.ச.பாலச்சந்திரன் அவர்கள் முன்வந்ததையடுத்து எமது சபை ஊடாக குறித்த பஸ்தரிப்பு நிலையம் அமைப்பதற்கு அனுமதி பெற்று பஸ்தரிப்பு நிலைய கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு 10.03.2019ஆம் திகதி பிரதேச வைத்திய அதிகாரியினால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் காரை கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி சிவகுமாரன் அவர்களும் கலைமணி சண்முகரத்தினம் அவர்களும், பிரதேசசபைத் தவிசாளர் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். கணிசமான பொதுமக்களும் கலந்து கொண்டனர். இவ் நிழற்குடைக்கான செலவீனம் 248650/= ரூபாவாகும். இச் செலவீனம் அவரின் புதல்வர் திரு.ச.பாலச்சந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது.





## 21. காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஒன்றுகூடலும் சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வும்

மேற்படி நிகழ்வானது காரைநகரில் பல துறைகளில் சேவையாற்றியவர்களையும் கனடாவிலிருந்து வெளிவரும் "எனது ஊர் காரைநகர்" சஞ்சிகையின் சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வும் 31.12.2017 இல் காரைநகர் அபிவிருத்திச்சபை மணற்காடு அலுவலகத்தில் கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைப்பாறிய மருத்துவர் திரு.சுப்பிரமணியம் நடராசா, கலாபூஷணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, திரு.K.M.செல்வரத்தினம் (KMS முன்னாள் காரை இந்து ஆசிரியர்), முன்னாள் காரைநகர் பிரதேச செயலர் திரு.த.ஜெயசீலன், திரு.வே.சபாலிங்கம் (சிரமதான தொண்டர்), திருமதி.வாசுகி தவபாலன் (முன்னாள் காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர்), திரு.இ.சிறிதரன் (முன்னாள் ஊரி அ.மி.த.க.பாடசாலை அதிபர்), திரு.திருச்செல்வம் தவரட்ணம் (அதிபர்), பண்டிதை.செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம், திரு.க.நாகராசா (சிவகௌரி சனசமூக நிலையம், காரை அபிவிருத்திச்சபை), திருமதி.நடராசா இராசமலர் (முத்தமிழ் கலாமன்றம் - களபூமி), திரு.நாகலிங்கம் பாலகிருஸ்ணன் (சிரமதான தொண்டர்) ஆகியோரையும் அகில இலங்கையில் 3வது இடம் உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்துறை ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குத் பயிரிக்கூடலைச் சேர்ந்த செல்வி.செ.கமலேஸ்வரிக்குமான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் சேவையாளர்களை பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் கனடா "எனது ஊர் காரைநகர்" சஞ்சிகை வெளியீட்டாளரும், ஊடகவியலாளருமாகிய திரு.தீசன் திரவியநாதன் அவர்களால் ரூபா 10000/= பொற்கிளி பரிசாகவும் வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கும் காரைநகரில் சேவையாற்றும் பொது நிறுவனங்களுக்கும் இப் பொற்கிளி பணப்பரிசும் அவரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.






## 22. கல்வி ஊக்குவிப்பு நிகழ்வு

காரைநகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க முதற்கட்டமாக வியாவில் சைவ வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கான சீருடையும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் 29.03.2019ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின் பொருளாளர் திரு.இரா தர்சன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டதும் எமது சபையின் முன்னாள் தலைவர்களான திரு.ப.விக்னேஸ்வரன், திரு.க.சோமசேகரம் மற்றும் சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்தமை தொடர்பில் காரைநகரில்

திறமைச் சித்தி பெற்ற 9A தொடக்கம் 6A வரையான மாணவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு எஸ்.கே.நாதன் நற்பணி மன்றத்தினரால் 01.04.2019ஆம் திகதி யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 9A பெற்ற இரு மாணவர்களுக்கும் தலா 25000/= ரூபாவும் 8A பெற்ற மாணவர்களுக்கு 20000/= ரூபாவும் 7A பெற்ற மாணவர்களுக்கு 15000/= ரூபாவும் 6A பெற்ற மாணவர்களுக்கு 10000/= ரூபாவுமாக மொத்தம் 7 மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டது. இதில் நாதன் நற்பணி மன்ற நிறுவுநர் பரோபகாரி, திருப்பணிஅரசு சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்கள் பாரியார் சகிதமும் எமது சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கப் பொருளாளர் திரு.இரா தர்சன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





## 23. உத்தியோக பூர்வ பணி (நிலமெஹெவர) ஜனாதிபதி மக்கள் சேவை

இலங்கை பூராகவும் மேற்படி மக்கள் சேவையினை முன்னெடுத்து வரும் வகையில் எமது காரைநகர் பிரதேச செயலகத்தின் மூலமாக 01.10.2018ஆம் தினம் காரைநகர் இந்துக்கல்லூரி வளாகத்தில் அனைத்துத் திணைக்களங்களும் வரவழைக்கப்பட்டு திணைக்களம் சார்ந்த மக்கள் சேவை சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைநகரைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்குபற்றி தங்கள் தேவையினை நிறைவேற்றிக் கொண்டனர். இந்நிகழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் வருகைதரும் மக்களுக்கு பழமரக் கன்றுகள் வழங்குவதற்கான கோரிக்கை பிரதேச செயலகத்தால் எமக்கு விடுக்கப்பட்டதை நாம் ஏற்று குறித்த பழமரக்கன்றுகள் வழங்குவதற்காக ரூபா 50000/= ஐ கனடா காரை கலாச்சார மன்றத்தினர் பொறுப்பேற்று குறித்த பழமரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.





## 24. கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஏற்பாட்டில் நூலக நிறுவனப் பிரதிநிதியுடனான கலந்துரையாடல் 17.03.2019 ஞாயிற்றுக்கிழமை காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தில் இடம்பெற்றது.

வரலாறுகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் காரைநகர் அபிவிருத்திச்சபை கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஏற்பாட்டில் ஈழத்துத் தமிழ் பேசும் எழுத்தாளர்களின் ஆக்கங்கள், புலம்பெயர் நாடுகளில் எம்மவர்களால் வெளியிடப்படும் ஆக்கங்கள், மற்றும் இலங்கை தொடர்பான நூல்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் நூலக நிறுவனப் பிரதிநிதியுடனான கலந்துரையாடல் ஒன்று 17.03.2019 ஞாயிற்றுக்ககிழமை காரைநகர் அபிவிருத்திச்சபை மாணவர் நூலகத்தில் இடம்பெற்றது. காரைநகர் அபிவிருத்திச்சபையின் தலைவர் திரு.நா.பாலகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கனடா காரை கலாச்சார மன்றத்தின் தலைவர் திரு.சபாரத்தினம் பாலசச்சந்திரன், மன்ற முன்னாள் செயலாளரும் உறுப்பினருமான திரு.தம்பிராசா ஜெயச்சந்திரன் மற்றும் காரைநகர் அபிவிருத்திச்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நூலக நிறுவனத்தின் பிரதிநிதி கு.சோமராஜ் இதில் கலந்துகொண்டு நூலக நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தார். இதில் அவர் தெரிவித்ததாவது ஈழத்துத் தமிழ் பேசும் எழுத்தாளர்களின் ஆக்கங்கள், புலம்பெயர் நாடுகளில் எம்மவர்களால் வெளியிடப்படும் ஆக்கங்கள், மற்றும் இலங்கை தொடர்பான நூல்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் இதுவரை அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட இவ்வாறான நூல்களைத் தாம் ஆவணப்படுத்தியுள்ளதாகவும் அவை அனைத்தும் நூலக இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனவும் நூலகங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் வீட்டிலிருந்தே இந்தச் சேவையைப் பெறுவதுடன் உலகின் எப்பாகத்திலிருந்தும் இந்த நூலகத்திலுள்ள புத்தகங்களைப் பார்வையிட முடியும்.

கடந்த 2005ஆம் ஆண்டு தொண்டு அடிப்படையில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இன்று 15 ஆண்டுகளைக் கடந்தும் எமது சேவை சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நூல்கள் காலத்தால் அழியாதவாறு மூன்று முறைகளில் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் வாய்மொழிமூல வரலாறுகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். 80 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்கள், அறிஞர்கள் ஆகியோரின் வரலாறுகள் அதனூடாக மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, பழைமை என்பன ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி நீத்தார் நினைவாக வெளியிடப்படும் கல்வெட்டுக்களும் அவற்றுள் காணப்படும் அரிய கட்டுரைகள், விடயங்கள் என்பன மற்றும் ஒவ்வொருவருடைய பரம்பரை என்பவற்றையும் அனைவரும் அறிந்து கொள்ளக்கூடியவாறு அவையும் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. காரைநகரிலும் பல்வேறு இடங்களில் உள்ள மிகப்பழைய ஓலைச்சுவடிகள், வரலாற்று நூல்கள், மிகப்பழைய நூல்கள் என்பனவற்றையும் வாய்மொழிமூல வரலாறுகளையும் ஆவணப்படுத்தியுள்ளோம். தொடர்ந்தும் இம் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். இதற்குக் காரைநகர் மக்களின் ஆதரவும் தேவை. அதனூடாக காரைநகர் மக்களின் வாழ்வும் வரலாறும் ஆவணப்படுத்தப்பட்டு அடுத்த சந்ததிக்கு வழங்க முடியும் என்றார். நூல்கள், வாய்மொழி வரலாறுகளை ஆவணப்படுத்த விரும்புவோர் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நூலக நிறுவனத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அல்லது நூலக நிறுவனப் பிரதிநிதி கு.சோமராஜ் அவர்களுடன் அவரது தொலைபேசி இலக்கம் 0773747828 இற்குத் தொடர்பு கொள்ள முடியும். இந்த முயற்சிக்குக் கனடா காரை கலாச்சார மன்றமும் தனது ஆதரவை வழங்கி வருவதுடன் ஒரு தொகைப் பணத்தினையும் நூலக நிறுவனத்திற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் காரைநகரில் பழைமை வாய்ந்த நூல்கள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் வாய்மொழி வரலாறுகளை ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு வழங்க விரும்புபவர்கள் ஓய்வுநிலை அதிபர் கலாபூஷணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





25. **பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தினரால் காரைநகர்ப் பிரதேச வைத்தியசாலை மேம்பாட்டிற்காக வைப்புச் செய்யப்பட்ட நிதியின் வருடாந்த வட்டிப்பணத்தின் மூலம் வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்**

2017.10.17ஆம் திகதி திறப்புவிழா உட்பட ஒன்பது வகையான செலவீனம ரூபா - 29270.00

2018 இல் ஏழு வகையான செலவீனம் - 64795.00

சிரமதான உபசரணை - 2035.00

கழிவுதொட்டி திருத்திய வகையில் - 3000.00

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவு – 4640.00

மேற்குப்பக்க விடுதிக்குப் பாதை அமைத்தது – 39600.00

2019 - புல் வெட்டும் இயந்திரத்திற்கான வாடகை – 7000.00





## 26. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்விச் சுற்றுலா

காரைநகரிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து கல்விச்சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையினை பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தினரிடம் விடுத்தனர். அதற்கமைவாக அச்சங்கத்தினுடைய தலைவர் திரு.செல்வச்சந்திரன் (நேரு மாஸ்ரர்) அவர்கள் எமது சபையின் முன்னாள் தலைவர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாட்டினை செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள் குறித்த முன்பள்ளி ஆசிரியர்களை எமது சபைக்கு 16.04.2019ஆம் தினம் வரவழைத்து எமது சபையுடன் கலந்தாலோசித்து குறுகிய காலத்திற்குள் இச்சுற்றுலா ஒழுங்கு படுத்தப்பட்டதை சுட்டிக் காட்டியதுடன் அவர்களின் முயற்சிக்குத் தடையாக இருக்கக் கூடாதென்ற நல்லெண்ணத்திலும் திரு.செல்வச்சந்திரன் அவர்கள் உதவ முன்வந்ததையும் கருத்திற்கொண்டு குறித்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இச் சுற்றுலா தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டு திரு.நேரு மாஸ்ரர் அவர்களால் வழங்கப்பட்ட ரூபா 100,000/= ஐ முன்பள்ளி ஆசிரியர் குடும்பத்தலைவி திருமதி.ம.கிளியோபெற்றா அவர்களிடம் கையளிக்கப்பட்டது. குறித்த ஆசிரியர் குழாம் 16.04.2019ஆம் தினம் 14 முன்பள்ளி ஆசிரியர்களும் அவர்களுடைய பிள்ளைகளுமாக மொத்தம் 41பேர் மாலை புறப்பட்டு 21.04.2019ஆம் தினம் அதிகாலை வந்தடைந்தனர். குறித்த நான்கு நாட்களின் போது கண்டி தலதாமாளிகை, பெரதெனியாப் பூங்கா, றம்பொட ஆஞ்சநேயர், நுவரெலியா திருத்துவபாலர் பாடசாலை, நுவரெலியா குதிரைத்திடல், சீத்தாஎலிய அம்மன் கோவில், கதிர்காமம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், கன்னியா வெந்நீரூற்று ஆகிய இடங்கள் பார்வையிடப்பட்டதுடன் நுவரெலியா திருத்துவபாலர் பாடசாலை ஆசிரியருடனும் நுவரெலியாவைச் சேர்ந்த ஏனைய ஒரு பாலர்பாடசாலை ஆசிரியர்களுடனும் கற்றல், கற்பித்தல் தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்றது. இக்கலந்துரையாடலுக்கு காரைநகர் பிரதேசசபையின் உபதவிசாளர் திரு.க.பாலச்சந்திரன் அவர்கள் ஒழுங்கு செய்து கொடுத்திருந்தார்.









## 27. சுவிஸ் காரைத் தென்றல்

சுவிஸ் காரைத் தென்றல் நிகழ்வு சுவிஸில் 16.09.2018ஆம் தினம் நடைபெற்றது. சுவிஸில் வாழும் 104 காரைவாழ் குடும்பங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் இவ்விழாவில் எமது சபையின் தலைவர் திரு.ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு 52 நிமிடங்கள் பேருரையாற்றியிருந்தார்.





## 28. தகுதியான வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு


தம்பிஐயா பரமானந்தம் அவர்கள் தமது பெற்றோர் ஞாபகார்த்தமாகவும் கனகசிவகுமாரன் அவர்களினதும், பரோபகாரி திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களதும் நிதிப்பங்களிப்புடன் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 09.01.2017இல் யாழ்ற்ரன் கல்லூரியிலும் 03.02.2017இல் காரை அபிவிருத்திச்சபை மாணவர் நூலகத்திலும் 09.02.2017இல் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் இம்மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.






## 29. காரைநகர் பிரதேச முன்பள்ளிகளின் 2019ஆம் ஆண்டு விளையாட்டு விழா


காரைநகர் பிரதேசத்திலுள்ள 13 முன்பள்ளிகளின் 115 மாணவர்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா 07.07.2019ஆம் திகதி சுப்பிரமணிய வித்தியாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு திருமதி.ஆ.குமாரதாசன் அவர்கள் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக காரை அபிவிருத்திச்சபையின் முன்னாள் தலைவர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினர் திரு.தி.மதிவதனன் அவர்கள் யாழ்ற்ரன் கல்லூரி முதல்வர் அவர்களும் காரை அபிவிருத்திச் சபையின் செயலாளர் க.நாகராசா அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கு பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் ரூபா 15500/= நன்கொடை வழங்கியிருந்தனர்.





## 30. வறிய மாணவிக்கான துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயிலும் மருதபுரத்தைச் சேர்ந்த பொருளாதார வளம் குன்றிய செல்வி.கேதீஸ்வரன் கீர்த்திகா என்பவருக்கு கனடா காரை கலாச்சார மன்றத்தினால் 18300/= ரூபா பெறுமதி கொண்ட லுமாலா துவிச்சக்கரவண்டி 24.07.2019ஆம் தினம் காரை அபிவிருத்திச்சபையில் வைத்து வழங்கப்பட்டது.



## 31. பனம் விதை நடுகை

- திரு.சிவா.தி.மகேசன் அவர்கள் பனை வளத்தை வளர்க்கும் நோக்கில் 1000 பனம் விதைகள் தீர்த்தக்கரை தூம்பில் பகுதியில் 2017.11.19ஆம் திகதி விதைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைவர் திரு.சிவா.தி.மகேசன் அவர்களும் உபதலைவர் திரு.சபாலிங்கம், செயலாளர் க.நாகராசா, பொருளாளர் மு.சு.வேலாயுதபிள்ளை மற்றும் சிவகௌரி க.தொ.கூ.சங்கத் தலைவர் திரு.ந.சிவபாலன் அவர்களும் இப்பணியில் ஈடுபட்டனர். பொதுமக்களும் இப்பணியில் ஈடுபட்டனர். இதற்கான செலவீனம் ரூபா 5100/= திரு.சிவா.தி.மகேசன் அவர்களால் செலவழிக்கப்பட்டது.





## 32. வெளியீடுகள்

எமது காரைநகர் அபிவிருத்திச்சபையின் வளர்ச்சிக்கும் பொதுமக்களுக்கும் பணியாற்றி வரும் அமரர்களை நினைவு கூர்ந்து எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும் அமரர்களுக்கான நன்றியறிதலை வெளிப்படுத்தும் நோக்கில் எம்மண்ணிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து பொதுப்பணிகளில் ஈடுபட்டவர்களைக் கௌரவித்தும் அமரத்துவம் அடைந்தவர்களுக்கான துயர்பகிர்வு வெளியீடுகளையும் நாம் வெளியிட்டு வருகின்றோம். அந்த வகையில் பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி அவர்களுக்கும், எமது அலுவலக உதவியாளரின் தகப்பனார் அமரர் அப்புத்துரை இராசையா அவர்களுக்கும், முத்தமிழ் பேரவைத்தலைவி அமரர் நடராசா இராசமலர் அவர்களுக்கும், நூலக வளர்ச்சிக்கு அர்ப்பணித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அமரர் அருணாசலம் முத்துலிங்கம் அவர்களுக்கும், களபூமி காரைநகரைச் சேர்ந்த அமரர் நாகலிங்கம் கணேசப்பெருமாள் அவர்களுக்கும் துயர்பகிர்வு வெளியீட்டினை வெளியிட்டும் பொதுச்சேவையில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் டாக்டர்.திரு.சுவாமிநாதன் அவர்களையும் திரு.நடராசா அவர்களையும் கௌரவித்து எமது நன்றிக்கடனைச் செலுத்தி வருகின்றோம்.

## 33. ஏனைய பொதுப்பணிகள்

- அடுத்து கோவளம் விளையாட்டுக் கழகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கவும் அவ் விளையாட்டுக் கழகத்தினரின் பொதுப்பணிகளின் ஆர்வத்தை கணக்கிட்டு அவ்விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா 6650/= பெறுமதியான 500 லீற்றர் தண்ணீர்த்தாங்கி வழங்கப்பட்டது. இப்பணம் எமது சபையின் நிதியிலிருந்து வழங்கப்பட்டது.
- மேலும் அம்பாள் முன்பள்ளி ஆசிரியை நா.கலைச்செல்வியின் குடும்ப நிலைமையைக் கருத்திற்கொண்டு அவருக்கான சத்திரசிகிச்சைச் செலவாக 100,000/= ரூபாவில் 30000/= ரூபா பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கமும் 70000/= ரூபா எமது சபையின் பணத்திலிருந்து வழங்கப்பட்டது.
- அம்பாள் முன்பள்ளி மாணவர்களுக்கு பரீட்சார்த்தமாக ஒரு மாதத்திற்கான சத்துணவிற்கு ரூபா 10000/= வழங்கப்பட்டது. இப்பணம் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்திடமிருந்து வழங்கப்பட்டது.
- ஊரிக்கிராமத்தைச் சேர்ந்த சிவரஞ்சனின் வறுமை நிலை காரணமாக மருத்துவ உதவி கோரிய விண்ணப்பம் பிரதேச செயலகத்தால் சிபார்சு செய்யப்பட்டுக் கிடைத்ததை முன்னிட்டு குறித்த சிவரஞ்சனுக்கு மருத்துவ உதவி நிதி ரூபா 10000/= வழங்கப்பட்டது. இந்நிதி காரை அபிவிருத்திச்சபையால் வழங்கப்பட்டது. மேலும் ஊரிக்கிராமத்தைச் சேர்ந்த பிரதாப் பிரசாந்தினி என்பவருக்கு மருத்துவ உதவிக்கு ரூபா 8000/= வழங்கப்பட்டது.
- காரைநகர் கிழக்கு கமக்கார அமைப்பிற்கும் காரைநகர் தெற்கு கமக்காரர் அமைப்பிற்கும் நெல் வயலுக்கான பாதுகாப்பு வேலி அமைப்பதற்கு தலா 50000/= இரு அமைப்பிற்கும் வழங்கப்பட்டது. இதுவும் அபிவிருத்திச்சபை நிதியாகும்.
- யுத்த காலத்தின்போது தாய்,தந்தையரை இழந்த பெரியமணலைச் சேர்ந்த நக்கீரன் என்ற சிறுவனுக்கு பலவருடங்களாக மனிதநேய மற்றும் கற்றலுக்கான உதவுதொகையாக ரூபா 4000/= மாதாந்தம் வழங்கப்படுகின்றது. இவ் உதவுதொகை கனடா காரை கலாச்சார மன்றத்தால் வழங்கப்படுகின்றது.
- யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்பொழுது கொடிக்கம்பம் இல்லாத குறையினை நிவர்த்தி செய்து தருமாறு குறித்த வித்தியாலயம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 19056/= பெறுமதி கொண்ட கம்பங்கள் எமது சபையால் வழங்கப்பட்டது.
- காரைநகரைச் சேர்ந்த மாற்று வலுவுள்ள திரு.கந்தசாமி ஐங்கரனின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக கனடா காரை கலாச்சார மன்றத்தால் ரூபா 750,000/= வைப்புச் செய்யப்பட்டு அவ்வைப்பின் வட்டிப்பணம் அவருக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றது.
- எமது வலந்தலைச் சந்தி பஸ்தரிப்பிட வீதி செப்பனிட்டுத் தருமாறு எமது சபை விடுத்த கோரிக்கையின் பிரகாரம் வடமாகாணசபை உறுப்பினர் திரு.ஜெயசேகரம் அவர்களினால் வடமாகாணசபை நிதியிலிருந்து ரூபா 100,000/= ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த வீதி செப்பனிடப்பட்டது.

- அம்பாள் முன்பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியை திருமதி. மங்கயற்கரசியின் கணவர் இறந்ததையிட்டு அவரின் குடும்ப நிலையைக் கவனத்திலெடுத்து அக்குடும்பத்திற்கு ரூபா 25000/= மனிதாபிமான நன்கொடையாக பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் நிதியிலிருந்து அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டது.
- களபூமி சனசமூக நிலையத்தின் 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அச்சனசமூக நிலையத்திற்கு ரூபா 50000/= நன்கொடையாக வழங்கும்படி சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை கேட்டுக்கொண்டதற்கிணங்க சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

## 34. கூட்டங்களும் கலந்துரையாடல்களும்

27.03.2017ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபைக் காலத்திலிருந்து 11.08.2019 திகதி வரை எமது சபையின் மூலம் குடிநீர், கல்வி, நூலகம், வாழ்வாதார உதவிகள், தற்காலிக வீட்டுத்திட்டம், மரநடுகை, குளங்கள் தூர்வார்வு, கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும், விளையாட்டுத்துறை மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக 41 நிர்வாகசபைக் கூட்டங்களும் புலம்பெயர் நாட்டில் இருக்கும் எமது கிளைச்சங்கப் பிரதிநிதிகள் வருகையின்போது 06 கலந்துரையாடல்களும் நடாத்தப்பெற்று எமது சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளோம்.

## 35. நிறைவுரை

எமது அபிவிருத்திச்சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 27.03.2017ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டு செயலாற்றிக்கொண்டிருந்த காலகட்டத்தில் தலைவர், செயலாளர் ஆகியோரின் பதவிகளில் மாற்றம் ஏற்பட்டு உபதலைவரும் உபசெயலாளரும் குறித்த தலைவர் செயலாளர் பதவிகளைப் பொறுப்பேற்று சபையின் நடவடிக்கைகளில் எதுவித தடங்கலும் ஏற்படாத வகையில் செயற்பட்டு வந்துள்ளோம். குறித்த காலப்பகுதியில் சபைக்கு சொந்தமாக விளான் பகுதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டு குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் கடந்த நிர்வாகத்தால் சேகரிக்கப்பட்டு நிரந்தர வைப்பில் உள்ள பணத்தில் பாடசாலைகளுக்கான நிரந்தர வைப்பு ரூபா 12,000,000/= வும் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் முன்பள்ளிகளுக்கான வைப்பாகப் ரூபா 1,000,000/= வும் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தின் வைத்தியசாலை மேம்பாட்டிற்காக ரூபா 1,000,000/= வும் இருந்தது. எமது காலப்பகுதியில் காணிக் கொள்வனவிற்கும் கிணறு அமைப்பதற்காக 1,834,436.44 மீளப் பெற்று 1,804,308.16 சதம் செலவழித்துள்ளோம். எமது இக்காலப்பகுதியான 2017, 2018, 2019 ஆடி மாதம் வரை 2,600,000/= ரூபா நிரந்தர வைப்புச் செய்யப்பட்டுத் தற்பொழுது நிரந்தர வைப்பாக

| | |
|---|---|
| 1. 12 பாடசாலைகளுக்கான நிரந்தர வைப்பு – கனடா | 12,000,000.00 |
| 2. முன்பள்ளிகளுக்கான நிரந்தர வைப்பு – பிரான்ஸ் | 1,000,000.00 |
| 3. வைத்தியசாலை மேம்பாட்டிற்காக – லண்டன் | 1,000,000.00 |
| 4. காரை அபிவிருத்திச்சபையின் நிரந்தர வைப்பு | 5,651,704.35 |
| | 19,651,704.35 |

ரூபா ஒரு கோடி தொண்ணூற்றாறு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று நான்கு சதம் முப்பத்தைந்து இருக்கிறது. இக்காலப் பகுதியில் எமது சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்த பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பிரதேசசபைத் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாராதப் பரிசோதகர், நீர்வளச்சபையினர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உத்தியோகத்தர்கள், கல்லூரிச்சமூகம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், எமது சபை குடிநீர் விநியோகஸ்தர்கள், புலம்பெயர் நாடுகளில் செயற்படும் எமது கிளைச்சங்க நிர்வாக சபையினரும் பொதுச்சபையினரும், காரியாலய பணியாளர்கள், நூலகக் குழுவினருக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் இக்கட்டான நிலையில் எமது காரியாலயம் செயற்படத் தமது வீட்டினைத் தந்துதவிய பரோபகாரி திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களுக்கும் குடிநீர் விநியோகத்தில் ஆதரவளித்த போசகர் திரு.தி.பரமேஸ்வரன் அவர்களுக்கும் உபதவிசாளர் திரு.கணேசபிள்ளை பாலச்சந்திரன் அவர்களுக்கும் நீர்வேலிக்கிணற்று உரிமையாளருக்கும் மற்றும் எமது பொதுச்சபையினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எதிர்காலத்தில் இந்தச் சபையூடாக இன்னும் பல பொதுப்பணிகளைச் செய்வதற்கு அர்ப்பணிப்போடு செயற்படக்கூடியவர்களை எதிர்வரும் நிர்வாக சபைக்குத் தெரிவுசெய்து இச்சபையின் கௌரவத்தையும் சொத்துக்களையும் பாதுகாத்து செயற்பட வேண்டுமெனக் கேட்டு இச் செயற்பணி அறிக்கையை நிறைவு செய்கின்றோம்.

| | | |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |